# மார்ச் - 22 - புதன்

## புனித மரிய ஜோசப்பாத்

**“அவருடைய நீதி நெறிகள் அவர்களுக்குத் தெரியாது” திபா 147:20**

------------------------------------------------------------------------------------------------

## முதல் வாசகம்: இணைச்சட்டம் 4 : 1, 5 – 9

இப்பொழுது இஸ்ரயேலரே! கேளுங்கள் நான் உங்களுக்குக் கற்றுத்தரும் நியமங்கள் முறைமைகளின்படி ஒழுகுங்கள். அதனால் நீங்கள் வாழ்ந்து, உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் சென்று அதை உரிமையாக்குவீர்கள். நம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும் முறைமை களையும் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். எனவே, நீங்கள் போய் உரிமையாக்கிக் கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள். அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற் றலுமாய் விளங்கும். இந்த நியமங்களைக் கேள்வியுறும் அனைவரும், உண்மையில் இப்பேரினம் ஞானமும்இ அறிவாற்றலும் கொண்ட மக்களால் ஆனது என்பர். நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப்போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக் கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? நான் இன்று நேர்மைமிகு சட்டங்களை உங்களுக்குத் தந்துள்ளேன். இவற்றைப் போன்ற நியமங்களையும் முறைமைகளையும் கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? கவனமாய் இருங்கள் உங்கள் கண்களால் நீங்கள் கண்ட அனைத்தையும் மறந்து போகாதபடி உங்கள் இதயங்களில் காத்துக் கொள்ளுங்கள் உங்கள் வாழ்நாள் முழுமையும் நீங்கள் அவற்றை மறக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் அவற்றை எடுத்துக் கூறுங்கள்.

**பதில்பாடல் :** ஜெருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக

## நற்செய்தி: மத்தேயு 5 : 17 – 19

அந்நாட்களில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது,: ”திருச்சட்டத்தையோ இறை வாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்று வதற்கே வந்தேன். ”விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவையனைத் தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்“ என்றார்.

**தியானம்:** போதனைகளில் சிகரமான மலைப்பொழிவில் நற்பேறு பெற்றவர் யார்? என்ற போதனைக்கு அடுத்ததாக இவ்வுலகின் உப்பாக - ஒளியாக வாழுங்கள் எனப்படும் அறிவுரையைத் தொடர்ந்து “திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம்” (மத்தேயு 5:17) என வரவிருக்கும் இறையாட்சியின் நற்செய்தியை அறிவிக்கின்றவராக தம்மை எமக்கு அறிமுகம் செய்யும் ஆண்டவர் இயேசுவை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். அதேவேளையில் நற்செய்தியை அறிவிப்பவர்களது பணி எத்தகையதாக இருத்தல் வேண்டுமெனவும், எவ்வாறான நற்செய்திப் போதனையைக் கடைப்பிடிப்பவர்கள் விண்ணரசில் பெரியவர் எனக்கருதப்படுவார் எனவும் நற்செய்தி எமக்கு வேறுவிதமாகப் படிப்பிப்பதால், ஆண்டவர் இயேசு நமக்குப் போதிப்பதென்ன? ஆண்டவர் இயேசு யூதகுடும்பத்தில் பிறந்திருந்தமையால் அவரது ஆண்மீகம் யூத மத ஆன்மீக முறைமையில் அமைந்திருந்ததாக நாம் கருத்தில்கொள்ளலாம். எனினும், அவர் யூதமதத்தின் ஒருசில சம்பிரதாயங்களை மாற்ற முயன்றதனை நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. யூதமதத்தைக் கடைப்பிடிப்போர் சட்ட நுணுக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஆனால் சட்டத்தின் உண்மைப்பொருளை கடைப்பிடிக்க மாட்டார்கள். ஏனெனில், “மறைநூல் அறிஞர் - பரிசேயர் ஆகியோரின் செய்கையைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும் இல்லையெனில் நீங்கள் விண்ணரசில் புகமுடியாது” (மத்தேயு 5:20) என்கின்றார். எனவே, இறைவார்த்தையை நமது வாழ்வாக்கி இறைவார்த்தையின்படி வாழ்வதே மிகப்பெரிய நற்செய்தி அறிவிப்புப்பணியென ஏற்றுக்கொள்வோம். இத்தவக்காலத்தில் நாமும் இறைவார்த்தையை நமது வாழ்வாக்க முன்வருவோம்.